**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 147 of 2019

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.சீனிவாசன்

Date : 26.06.2025

**4, 9, 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. பின்பு சாட்சி தெரியும் என்று சொல்கிறார். எனக்கு தெரியாமல் நிலம் முழுவதையும் விற்று விட்டதால் வழக்கு போட்டுள்ளேன். சக்திவேல் விற்றார். யார் யாருக்கு, எந்த தேதியில் விற்றார் என்று தெரியவில்லை. நான் 1, 2 பிரதிவாதிகள் மீது பாகம் கேட்டு இந்த வழக்கை போட்டுள்ளேன். மற்ற யார் மீதும் வழக்கு போடவில்லை. 4ம் பிரதிவாதி என் அக்காவின் மகன். என்னுடன் பிறந்த சகோதரி பெயர் செவத்தா, சரோஜா, முத்துமணி, பாபு. 4ம் பிரதிவாதியின் அம்மா பெயர் தான் செவத்தா. எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்குள் பாகம் ஏற்படவில்லை என்றால் சரிதான். என் அப்பா, என் அம்மா உயிருடன் இருக்கும் போதே பெண்களுக்கு எல்லாமே செய்து விட்டார். நிலமாக சொத்துக்கள் எதுவும் சகோதரிகளுக்கு கொடுக்கவில்லை.

2) 1 முதல் 14 பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1 முதல் 14 பிரதிவாதிகளுக்கு தாவா

சொத்தில் பாகமுள்ளது என்றால் சரியல்ல. ராஜாவிற்கும், சக்திவேலுக்கு மட்டும் தான் உள்ளது. ஆவணம் மூலமாக பாகபிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். என் அப்பா இறந்து 30 வருடங்கள் இருக்கும். என்னுடைய வக்காலத்தில உள்ளது என்னுடையது கையெழுத்து இல்லை.

3) வா.சா.ஆ.7 27.4.2000 தேதியிட்ட கிரய பத்திரத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து இல்லை. வா.சா.ஆ7 கிரைய ஆவணத்தில் நான் 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து 4ம் பிரதிவாதிக்கு ரூ.9,600க்கு விலைபேசி 1200 சதுரடி காலி மனை விற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டு விட்டு தற்போது அது என்னுடைய கையெழுத்து இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. அந்த ஆவணம் என் தரப்பில் வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)